# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2016 ஜுலை திங்கள் 29–ம் நாள் (29.07.2016) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண். 1**

தமிழக சட்டமன்ற தேர்தல் 2016–ஐ முன்னிட்டு இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள வாக்கு சாவடிகளில் குடிநீர், மின்சாரம் மற்றும் பந்தல் வசதிகள் மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணையத்தால் அறிவுரை வழங்கப்பட்டதை தொடர்ந்து, தேர்தல் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ், மேற்படி பணிகளை மேற்கொண்டு, அதற்கான செலவுத்தொகை ரூ.41,313/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு:** தேர்தல் பணிகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/918–1/2016)

**தீர்மானம் எண்.1519, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் உள்ள சாலைகள், வடிகால் ஓடைகள், மேல் மூடிகள், சிறுபாலங்கள் மற்றும் குடிநீர் வினியோக வால்வு பிட்டுகள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கான 2016–17–ம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.4,00,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1499 நாள்.31.05.2016–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 15.07.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த வவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | திரு.T,சுகுமாரன்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| 2. | திரு.C,செல்லநாடார்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.13% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு. T,சுகுமாரன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 0.07% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/998/2016)

**தீர்மானம் எண்.1520, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்கு தேவையான 33% குளோரின் அளவு கொண்ட பிளீச்சிங் பவுடரை 2016–17–ம் ஆண்டிற்கு கொள்முதல் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.75,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1498 நாள்.31.05.2016–ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 15.07.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு
:

| | | |
|---|---|---|
| 1. | M/s.Jayapaba Traders, Thazhakudy, Nagercoil | மதிப்பீட்டு விகிதம்<br>( கிலோ ஒன்றிற்கு ரூ.28/–) |

| | | |
|---|---|---|
| 2. | M/s.Shanmuga Chemicals, Vadasery, Nagercoil | மதிப்பீட்டை விட 5.36% அதிகம் ( கிலோ ஒன்றிற்கு ரூ.29.50/–) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Jayapaba Traders, Thazhakudy நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வினியோக உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1110/2008)

**தீர்மானம் எண்.1521, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 4**

செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் ந.க.எண்.3802/16/AD1 நாள்.12.07.2016–ன்படி சாதாரண உள்ளாட்சி தேர்தல் 2016–ஐ முன்னிட்டு குளச்சல் நகராட்சியின் தேர்தல் உத்தேச செலவுத்தொகை ரூ.10.00 லட்சத்திற்கும், இச்செலவுத்தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.உரிய செலவினத்திற்கு அரசு நிதி பெறப்படாதபட்சத்தில் பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/918–1/2016)

**தீர்மானம் எண்.1522, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாரராக பணிபுரிந்த K.கிருஷ்ணதாஸ், என்பவர் ஒப்பந்த பணி எடுத்து செய்ததில் அன்னாரிடம் பிடித்தம் செய்யப்பட்ட முன்பணத்தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார்கள். அன்னாரிடம் பிடித்தம் செய்யப்பட்ட கீழ்கண்டத்தொகை காலங்கடந்த முன்பண பதிவேட்டில் இருப்பதால் அன்னாருக்கு மேற்படித்தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1.திரு.K.கிருஷ்ணதாஸ் ரூ.99,500/–

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.பி1/766/2015)

**தீர்மானம் எண்.1523, தீர்மானிக்கப்பட்டது**

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2016 ஜுலை வெள்ளி 29–ம் நாள் (29.07.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11–ல் க.எண்: 12–39–ன் அருகில் செல்லும் வடிகால் ஓடையில் கழிவு நீர் தேங்கி நிற்பதால், அப்பகுதியில் துர்நாற்றம் வீசி வருவதோடு, பொதுமக்களுக்கு நோய்கள் பரவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் வடிகால் ஓடையின் பக்க சுவர் உடைந்துள்ளதால், மேற்படி பகுதியில் புதிதாக மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 90,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1463/2016)

**தீர்மானம் எண்.1524, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 8–ல் க.எண்: 10/2–ன் அருகில் உள்ள குறுக்கு தெருவில் செல்லும் வடிகால் ஓடையின் பக்க சுவர் இடிந்து வடிகால் ஓடைக்குள் விழுந்துள்ளதாலும், மேற்படி தெரு மிக குறுகலாக உள்ளதால், கழிவு நீர் சீரான செல்ல முடியாமல் தேங்கியுள்ளது. இதனால் மேற்படி பகுதியில் துர்நாற்றம் வீசுவதோடு, பொது மக்களுக்கு நோய்கள் பரவும் சூழ்நிலை உள்ளது. எனவே பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு, மேற்படி தெருவில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைப்பதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ 90,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1462/2016)

**தீர்மானம் எண்.1525, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9–ல்– மரமடி பகுதியில், மின்கம்பம் எண்: 24–ன் அருகில் உள்ள குறுக்கு தெருவில் வடிகால் ஓடையில் கழிவு நீர் தேங்கியுள்ளதால், பொதுமக்களுக்கு நோய்கள் பரவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்படி வடிகால் ஓடை அமைத்து பல வருடங்கள் ஆகிவிட்டதால் பக்கசுவர் மிக மோசமாக சேதமடைந்து காணப்படுவதாலும், மேற்படி தெரு மிக குறுகலாக உள்ளதாலும், புதிதாக மேல் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 92,000/– க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** பொது நலனை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1460/2016

**தீர்மானம் எண்.1526, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:10–துறைமுகம் செல்லும் சாலையில், க.எண்: 10–103–ன் அருகில் உள்ள குறுக்கு தெருவில் செல்லும் வடிகால் ஓடையின் பக்க சுவர் செங்கற்களால் கட்டப்பட்டு, பல வருடங்கள் கழிந்துவிட்டதால், தற்போது பலமிழந்து உடைந்து வடிகால் ஓடைக்குள் விழுந்துள்ளது. இதனால் மேற்படி தெருவில், கழிவு நீர் வடிகால் ஓடையில் சீராக செல்லாமல் தேங்கியுள்ளதால், பொது மக்களுக்கு நோய்கள் பரவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்படி தெரு குறுகலாக உள்ளதாலும், மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ 50,000/–க்கும் மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** பொது நலனை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1461/2016)

**தீர்மானம் எண்.1527, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 5**

ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2012–13 திட்டத்தின் கீழ் , இந்நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.எஸ். காலனியில் 3 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள வளாகத்தில் , நகராட்சிக்கு ஏற்படும் மின் கட்டணத் தொகையினை குறைக்கும் வகையில் சூரிய ஒளியிலிருந்து மின் சக்தி பெறும் வகையில் solar panel- கள் நிறுவப்பட்டு 2 எண்ணம் 10 எச்.பி. நீர் மூழ்கி மோட்டார் மூலம் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றப்பட்டு வருகிறது. மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டு மூன்று வருடங்கள் கழிந்துவிட்டதால் , அடிக்கடி பழுது ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி solar panel –களின் ஆண்டு பராமரிப்பு தொகை ரூ.2,20,000/– க்கும் மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1464/2016)

**தீர்மானம் எண்.1528, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் பின்புற பகுதியில் குடிநீர் வினியோகத்திற்காக பதிக்கப்பட்டுள்ள பகிர்மான குழாய் , கேரளமுதலி கிறிஸ்தவ ஊர் வகைக்கு சொந்தமான மயமான பூமி வழியாக செல்வதால். இறந்தவர்களை அடக்கம் செய்வதில் சிரமம் ஏற்பட்டு வருவதாகவும், மேற்படி பகிர்மான குழாயை வழிபாதைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பதிக்குமாறும், கேரள முதலி கிறிஸ்தவ ஊர் பிரநிதிகள் கோரிக்கை விடுத்ததை ஏற்று, வழிபாதைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் 140 mm pvc குழாய் பதித்து, சீரான குடிநீர் வழங்குவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 25,000/– க்கும் மேற்படி பணியினை இந்நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ2/1531/2016)

**தீர்மானம் எண்.1529, தீர்மானிக்கப்பட்டது**

பொருள் எண். 7

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக மின் மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டுகள் ஆகியவை தற்போது பெய்த மழையின் காரணமாக பழுதடைந்து உள்ளது. எனவே குடிநீர் வினியோக பணிகளில் மேற்படி மின் மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டுகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு புதிதாக 3 எண்ணம் மின் மோட்டார்கள் மற்றும் 5 எண்ணம் பேனல் போர்டுகள் ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,62,000/–க்கும் மேற்படி பணியினை இந்நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1459/2016)

**தீர்மானம் எண்.1530, தீர்மானிக்கப்பட்டது**

பொருள் எண். 8

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகப்பகுதியில், குளச்சல் கடல்போர் வெற்றியின் நினைவாக, திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மா அவர்களால் நிறுவப்பட்டுள்ள போர் நினைவு வெற்றித்தூண் விழா ஒவ்வொரு ஆண்டும் ஜுலை 31–ம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, 31/7/2016–ம் நாள் நடைபெற உள்ள விழாவை முன்னிட்டு, மேற்படி வெற்றித்தூண் அமைந்துள்ள பகுதியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.48,000/–க்கு, அவசர அவசியம் கருதி, பணியினை விரைந்து மேற்கொள்ளும் பொருட்டு, இந்நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று, 28/7/2016 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் , பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு,

| | | |
|---|---|---|
| 1) | திரு. T. சுகுமாரன் ஒப்பந்ததார ர் | மதிப்பீட்டை விட 0.02 %குறைவு |
| 2 ) | திரு. C,செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1. 24% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு. T. சுகுமாரன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.02 %குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:**

1) பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) திரு. T. சுகுமாரன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.02 %குறைவாக அளித்துள்ள ஒ ப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். (இ1/1481/2016)

**தீர்மானம் எண்.1531, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி பகுதிகளிலருந்து நாள் ஒன்றுக்குT M.T குப்பைகள் சேகரிக்கப்பட்டு, உப்பளம் பகுதி உரக்கிடங்கில் கொட்டப்படுகிறது. மேற்படி பகுதியில் குப்பைகள் நிறைந்து விட்டதால், தொடர்ந்து குப்பைகளை கொட்ட இயலாத நிலை உள்ளது, மேலும் தூய்மை இந்தியா திட்டத்துடன் இணைந்து சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2015–16–ன் கீழ், உரக்கிடங்கு மேம்பாட்டு பணிகளுக்காக ரூ.178.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது, மேற்படி பணிகளில் முதற்கட்டமாக மண் நிரப்பும் பணி மேற்கொள்ளப்பட வேண்டி உள்ள நிலையில், உரக்கிடங்கில் குப்பைகள் நிறைந்துள்ளதால், மண் நிரப்பும் பணிக்கான வாகனங்களை உள்ளே கொண்டு செல்ல இயலாமல் உள்ளது. எனவே திட்டப்பணிகளை உரிய காலத்திற்குள் முடிக்க வேண்டியுள்ள அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, JCB மற்றும் Hitachi வாகனங்களைக் கொண்டு குப்பைகளை ஒரு பக்கமாக ஒதுக்கி வைக்கும் பணியினை மேற்கொள்வதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,20,000/- க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். (இ1/1458/2016)

**தீர்மானம் எண்.1532, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 10**

இந்நகராட்சியில் கீழ்காணும் விவரப்படி, தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | குழல் விளக்குகள் (40w) | –1268 எண்ணம் |
| 2. | CFL விளக்குகள் (40w) | –185 எண்ணம் |
| 3. | LED விளக்குகள் (40w) | –90 எண்ணம் |
| 4. | சோடியம் ஆவி விளக்குகள் (250w) | – 37 எண்ணம் |
| 5. | உயர் கோபுர மின் விளக்கு | – 1 எண்ணம் |
| 6. | சிறிய உயர் கோபுர மின்விளக்கு | –4 எண்ணம் |
| | மொத்தம் | – 1585 |

மேற்காணும் தெருவிளக்குகளை பராமரிப்பதற்கு, 2016–17–ம் ஆண்டிற்கு தேவையான மின் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்வதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 7,00,000/ –க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். (இ1/1108/2016)

**தீர்மானம் எண்.1533, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 11**

குளச்சல் நகராட்சியில் 2016–ம் ஆண்டு நடைபெறவிருக்கும் நகர்மன்ற உள்ளாட்சி தேர்தலுக்கு 24 வார்டுகளுக்குரிய வாக்குசாவடி பட்டியல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு முறைகளின்படியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வு கூட்ட நாள் 19.07.2016 அன்று தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின் படி கீழ்க்கண்டவாறு வாக்குச்சாவடிகளின் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**வாக்குச்சாவடி பற்றிய விவரங்கள்**

| வார்டு எண் | வாக்குச்சாவடி எண் | வாக்குச்சாவடியின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | அரசுதொடக்கப்பள்ளி,சாஸ்தான்கரை. (பிரதான கட்டிடத்தின் தெற்குபாகம்) |
| 2 | 2(ஆண்) | அரசு நடுநிலைப்பள்ளி பண்டாரவிளை, சார்பதிவாளர் அலுவலக எதிர்புறம், குளச்சல் |
| 3 | 3 | அரசு பெண்கள் தொடக்கப்பள்ளி, செக்காலத்தெரு, குளச்சல் |
| 4 | 4(ஆண்) | புனித மேரி மேல்நிலைப்பள்ளி, மெயின் ரோடு குளச்சல் ( கட்டிடத்தின் வடக்கு பாகம்) |
| 4 | 4(பெண்) | புனித மேரி மேல்நிலைப்பள்ளி, மெயின் ரோடு குளச்சல் ( கட்டிடத்தின் தெற்கு பாகம்) |
| 4 | 4(அ.வா) | புனித மேரி மேல்நிலைப்பள்ளி, மெயின் ரோடு குளச்சல் ( கட்டிடத்தின் வடக்கு பாகம்) |
| 5 | 5 | குழந்தைகள் வளர்ச்சி திட்ட கட்டிடம், கொட்டில்பாடு. |
| 6 | 6 | குழந்தைகள் வளர்ச்சி திட்ட கட்டிடம், கொட்டில்பாடு. (நடு கட்டிடம்) |
| 7 | 7 | குழந்தைகள் வளர்ச்சி திட்ட கட்டிடம், கொட்டில்பாடு. (வடக்கு கட்டிடம் கிழக்கு பாகம்) |
| 8 | 8 | துறைமுக அலுவலகம், இந்திராகாலனி |
| 9 | 9 | சத்துணவுகூடம்,மரமடி |
| 10 | 10 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (தெற்கு கட்டிடம் கிழக்குப்பகுதி) |
| 11 | 11 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (பிரதான கட்டிடம் நடுப்பக்கம்) |
| 12 | 12 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (பிரதான கட்டிடம் மேற்குபக்கம்) |
| 13 | 13 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (பிரதான கட்டிடம் கீழ் மேற்குபக்கம்) |
| 14 | 14 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (புதிய கட்டிடம்) |
| 15 | 15 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (புதிய கட்டிடம்) |
| 16 | 16 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி ,களிமார். (கிழக்கு பிரதான கட்டிட வடக்கு பக்கம்) |
| 17 | 17 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி ,களிமார் .( பிரதான கட்டிட தெற்கு பக்கம்) |
| 18 | 18 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி களிமார் .( பிரதான கட்டிட தெற்கு பக்கம்) |
| 19 | 19 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி ,களிமார். ( வடக்கு பிரதான கட்டிடத்தின் கிழக்கு பாகம்) |
| 20 | 20 | அரசு உயர்நிலைப்பள்ளி, இலப்பவிளை. (வடக்கு கட்டித்தின் கிழக்கு பாகம்) |
| 21 | 21 | அரசு உயர்நிலைப்பள்ளி, இலப்பவிளை. (பிரதான கட்டிடத்தின் மேற்கு பாகம்) |
| 22 | 22 | அரசு உயர்நிலைப்பள்ளி, இலப்பவிளை. .(கட்டிடத்தின் கிழக்கு பாகம்) |
| 23 | 23 | அரசு தொடக்கப்பள்ளி சாஸ்தாங்கரை. (பிரதான கட்டிடத்திடன் வடக்கு பாகம்) |

| | | |
|---|---|---|
| 24 | 24 | புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி<br>.(தெற்கு கட்டிடம்) |

அ.கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்து அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.அ2/1051/2016

**தீர்மானம் எண்.1534, தீர்மானிக்கப்பட்டது**